செ. கு. எண்: 039 நாள் :04.02.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 4.2.2016

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், புன்செய் புகளூர் தெற்கு கிராமத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் நிலக்கரி கொண்டு செல்லும் கன்வேயர் பெல்ட் அருகே 3.2.2016 அன்று தீ விபத்து ஏற்பட்டதில், அப்போது பணியிலிருந்த புன்செய் தோட்டக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. அண்ணாதுரை என்பவரின் மகன் சௌந்தரி மற்றும் நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், பொத்தனூரைச் சேர்ந்த திரு. சுப்பிரமணி ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. சௌந்தரி மற்றும் திரு. சுப்பிரமணி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், இச்சம்பவத்தில் பலத்த காயமடைந்த கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், சேமங்கி கிராமத்தைச் சேர்ந்த திரு. தேவராஜுக்கு 50,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**